# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018
## தமிழ் இலக்கிய நயம் / දෙමළ සාහිත්‍ය - T 48

சுட்டெண்:.................................. தரம் : **11** நேரம்: 3 மணித்தியாலம்

♦ **பகுதி I இல் 1, 2 ஆகிய இருவினாக்களுக்கும் பகுதி II இல் 3 ஆம் வினாவுக்கும் பகுதி III இல் 4. 5. 6, 7 ஆகிய வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி I

*1.* **1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

1) முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாட்டம்
வேல் உண்கண் வேய்த்தோ ளவட்கு
அ) இக் குறட்பாவினைக் கொண்டு கூட்டி எழுதுக.
ஆ) இக் குறட்பாவின் பொருளைத் தருக.

2. “மகவாய் வளர்க்கும் தாய் ஆகி
ஊழி உய்கும் பேர் உதவி ஒழியாய் வாழி கவேரி”
அ) இப்பாடலில் இடம் பெறும் அணி யாது?
ஆ) இங்கு எதன் சிறப்பு கூறப்படுகின்றது.

3 “முன்னை வீரன், இளவலை, மொய்ம் பினோய்”
அ) இத்தொடரில் சிறப்பிக்கப்படும் அணி யாது?
ஆ) ‘மொய்ப்பினோய்” என்ற பாடலாடியின் மூலம் சிறப்பிக்கப்படுபவர் யார்?

4. “நில்லுங்க, இந்த கோப்பிய குடிச்சிட்டுப் போங்க ராவு பசியில இருந்திட்டு...”
அ) இக்கூற்று யாரால் - யாருக்க கூறப்பட்டது?
ஆ) இக்கூற்று இடம் பெறும் சிறுகதை யாது?

5. சுனைப்புக் குற்றுத் தொடலை தை இப்
புனக்கிளி கடியும் பூங்கட்கோதை......
அ) இப்பாடல் யாரால் பாடப்பட்டது?
ஆ) கிளி கடிதல் என்றால் என்ன?

(4 x 5 =20 புள்ளினகள்)

2. கீழ்காணும் பாடற்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

காலையிலே பனி காயுமுன்னே குளிர்
காற்றைக் கிழித்துமே ஓடுகின்றோம் - தொழிற்
சாலையிலே சங்கு ஊதி முன்னே பசுந்
தங்கத் தளிரினை கிள்ளிடுவோம்
வெண்டை விரல்கள் விறைந்திடுனும் எங்கள்
மேனி குளிரில் நடுங்கிடினும் - இரு

கெண்டை விழிகள் பளபளக்கும் , தளிர்
கிள்ளிவோ கைகள் பரபரக்கும்!

சட்டை அசைந்து பக்கத்திலும் வந்து
கூட்டும் ''கிறுக்கிறுக்'' கோசையிலே – நெஞ்ச
மேடையிலே சதிராடு மெண் ணங்களின்
வேதனை துன்ப ஒலி கேட்கும்!

பக்க நிரைச் செடி சிக்கிடும் போதிலும்
பக்குவ மாகவி லக்கிச் செல்வோம் - எம்மைச்
சிக்கவைத் திருக்கும் அடிமைத் தளையினை
தூக்கி யெறியத் துணிவு கொள்வோம்'

வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென
மேலுறும் எண்ணம் எங்கள் மனதில் - இனி
முட்டித் ததும்பி முளைத்து விடும் எம்மை
மூடிய பேரிருள் ஓட்மிடுவோம்

என்றும் அடிமைச் சிறையினி லே வைத்த
எத்தர்கள் கொட்ட மடக்கிடவே பெருங்
குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு
கோதையர் போரிட முன் வருவோம்!

1) இக்கவிதையைப் பாடிய புலவர் யார்?
2) இக்கவிதையின் மையக்கருத்து யாது?
3) மலையகப் பெண்களின் கடின உழைப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
4) காற்றை கிழித்துமே ஓடுகிறோம்! என்ற வரியின் பொருள் யாது?
5) பசுந்தங்கத் தளிரினை கிள்ளிடுவோம்! இதில் கையாளப்பட்டுள்ள அணி யாது விளக்குக.

( 5 X 5 = 25 புள்ளிகள்)

## பகுதி II

03) கீழ்காணும் உரைப்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அவன் குழந்தைப் பருவத்தில் தொட்டிலாகி, நடை பழகும் பருவத்தில் நடை வண்டியாகி, பள்ளிப் பருவத்தில் ஏடுகளாகி, மணப்பருவத்தில் கட்டிலாகி, கிழப்பருவத்தில் ஊன்று கோலாக இறந்த பிறகும் பாடையாகி, சிதையிலும் உடன்கட்டை ஏறி அவன் சாம்பலோடு சாம்பலாகிக் கலந்து மனிதனுக்காகவே தங்களை முற்றிலும் அர்ப்பணம் செய்யம் மரங்கள்

மனிதனின் தாகத்திற்குப் பானம் தந்து பசிக்கு உணவூட்டி, உடுத்த உடையாக வசிக்க வீடாகி, நோய்க்கு மருந்தாகி, அவன் பயணத்திற்கு சக்கரங்களாகி அவன் வேலைகளில் கைகளுக்குள் கைகளாகி, அவன் சுவாசத்திற்காக காற்றை சலித்துக் கொடுத்து அவனுக்காக மேகங்களைக் கெஞ்சி பிச்சை கேட்டு ஓ! மரங்கள் மட்டும்இல்லையென்றால் மனிதன் வாழ்ந்திருப்பானா?

1) மனிதனின் வாழ்க்கைப் பாதையில்மரங்கள் எவ்வாறு இரண்டறக் கலக்கின்றன.
2) மரம் மனிதனுக்கு செய்த உதவிகள் யாவை?
3) 'அவனுக்காக மேகங்களைக் கெஞ்சிப் பிச்சைக் கேட்டு....' இதில் கையாளப்பட்டுள்ள அணி யாது?

4) அவன் சுவாசத்திற்கான காற்றை சலித்துக் கொடுத்து என்ற அடியின் சிறப்பை விளக்குக.

5) ஒத்த சொல் தருக.

1. மரம் 2. நோய்
3. உணவு 4. கை
5. மேகம்

( 5 X 5 = 25 புள்ளிகள்)

## பகுதி III

- **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.**

04) ‘‘மின் மினிகளால் ஒரு தோரணம்’’ என்ற கட்டுரையில்

அ) ஹைக்கூ என்பது யாது?

ஆ) ஹைக்கூவின் பரிமாண வளர்ச்சியின் பங்குதாரர்கள் யாவர்

(15 புள்ளிகள்)

05) ‘‘தீவு மனிதன்’’ என்ற சிறுகதையில்,

அ) சிறுகதையின் கருப்பொருள் யாது?

ஆ) கதை சொல்லி தனிமைப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் யாவை?

06) யேசு கிறிஸ்து – பாரதியார் கவிதையில்,

அ) யேசு கிறிஸ்து நாதர் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்து எழுந்தமை பற்றியும் அவர் எமது துன்பம் துடைப்பது பற்றியும் பாரதியார் எவ்விதம் நோக்குகின்றார்?

ஆ) மரியா மதலே னா, யேசு கிறிஸ்து நாதர் ஆகியோர் பற்றிய பாரதியார் சித்தரிப்புகளை விபரிக்குக.

(15 புள்ளிகள்)

07) ‘‘அமுதம்’’ என்ற கவிதையில்,

அ) மையக்கருத்து வெளிப்படும் விதம் யாது?

ஆ) மனைவி சமைத்த உணவை கணவன் எவ்வாறெல்லாம் புகழ்ந்துரைக்கின்றார்?

(15 புள்ளிகள்)